www.tamilarangam.net

00 177

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

மே.ஜேர்மனி கிளை.

28-07-90

# விடுதலைப் போரில் மக்களின் பங்களிப்பு

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

இன்று நாம் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுக் காலகட்டத்தில் நிற்கின்றோம். இந்திய ஆக்கிரமிப்பை வீரமும், தியாகமும் செறிந்த எமது மக்களின் தேச மீட்புப் போராட்டத்தின் வாயிலாக விரட்டியடித்தோம். இன்று எமது மண் மீதும் எமது மக்கள் மீதும் தனது காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதத்தை சிங்கள அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இந்த நிலையில் எமது மக்களைப் பாதுகாப்பதற்காகவும், இனவாத அரசின் இராணுவ அணுகு முறையை முறியடிப்பதற்காகவும் முழு அளவிலான யுத்தத்திற்கு தயாராவதைத் தவிர விடுதலைப் புலிகளுக்கு வேறு வழி இல்லை.

தமிழ் பேசும் மக்கள் மீதான சிறீலங்காப் படைகளின் காடைத்தனங்களாலும், சிறீலங்கா அரசு அரசியல் முன்னெடுப்புக்களை இழுத்தடிக்கும் தந்திரத்தை கையாண்டதாலும் பேச்சுவார்த்தைச் சூழ்நிலை உடைந்து போயிற்று. 10. 06. 90 இல் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் இடையே போர் மூண்டது. அதன் பின்னர் நீதி அமைச்சர் ஜஹுப் சாகுல் கமீட் இற்கும் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திற்கும் இடையே இரு தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று இரு தடவைகள் போர் நிறுத்தத்திற்கான இணக்கமும் காணப்பட்டது. ஆனால் அவற்றை சிறீலங்கா இராணுவம் வலிந்து மீறியது. இதனையடுத்தே சிறீலங்காப் படைமீது விடுதலைப் புலிகள் தமது மூர்க்கமான தாக்குதல்களைத் தொடுத்தனர்.

தமிழீழ மண்ணின் மீட்பிற்காகவும் தமிழீழ மக்களின் உரிமைகளுக்காகவும் கடந்த 17 ஆண்டுகளாக அற்புதமான தியாகங்களைப் புரிந்து போராடிவரும் விடுதலைப் புலிகளுக்கும் இனவாதத்தையும், தமிழீழம் மீதான தமது ஆக்கிரமிப்புக் கொள்கைகளையும் மெருகேற்றிப் பாதுகாத்துவரும் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் இடையே உடன் பாடுகள் தோன்றாதென்பதையே தற்போதைய யுத்தம் சுட்டி நிற்கின்றது.

எமது மக்களின் மானத்தை, கௌரவத்தை, உணர்வுகளை, உரிமைகளை விடுதலைப் புலிகள் ஒருபோதும் அடகு வைக்க மாட்டார்கள் என்பதையே இந்தியாவுடனான யுத்தமும், சிறீலங்காவுடனான யுத்தமும் கோடு கிழித்துக் காட்டுகின்றது.

எமது தேசம் விடுதலை பெறும் வரை எமது மக்களினதும் எமது போராளிகளினதும் இழப்புகள் தவிர்க்க முடியாதவை என்பதை நீங்கள் அறிவீர்கள். பதவிகளுக்காகவோ, சலுகைகளுக்காகவோ எமது போராட்டம் அமைந்திருப்பின் இத்தகைய யுத்தங்களோ, இத்தகைய இழப்புகளோ ஏற்படா என்பதும் உங்களுக்குப் புரியும்.

எமது மக்களின் இழப்புகளும், எமது போராளிகளின் இழப்புகளும் எமது இதயங்களில் ஆறாத வேதனைகளையும், மாறாத வடுக்களையும் ஏற்படுத்துகின்றன. எனினும் எமது தேசத்தை மீட்டெடுக்கின்ற புனிதப் போரில் இத்தகைய இழப்புகள் தருகின்ற தாக்கத்தை தாங்கவேண்டியவர்களாகவே இருக்கின்றோம்.

எமது சந்தோசத்திலும், எமது துக்கத்திலும் எம்மோடு சந்தோசித்து எம்மோடு துக்கித்து எமது உணர்வுகளோடு இறுகி ஒன்றாய்க் கலந்து ஐக்கியப்பட்ட எமது மக்களின் வாழ்க்கைக்கானது இச்சுதந்திரப் போராட்டம். பிறந்து தவழ்ந்து வளர்ந்த நம் மண்ணின் மீதும் எமது கடலின் மீதும் எமது காற்றின் மீதும் எமது இயற்கைச் செல்வங்களின் மீதும் எமக்குண்டான உரிமைகளை மீட்பதற்காக சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் முன்னெடுத்துச் செல்லப் படுகின்ற எமது சுதந்திரப் போராட்டத்தில்............

உணர்வுள்ள மக்களே உங்களது பங்களிப்பென்ன?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

சிங்கள அரசின் யுத்த முன்னெடுப்புகளுக்கு, தமிழ் பேசும் மக்களை அழித் தொழிப்பதென்ற திட்டமிட்ட இனவாதத்திற்கு சிங்களப் பாடசாலை மாணவ மாணவியர் தம் ஒரு நேர உணவை ஒறுத்து நிதி வழங்குகின்றார்கள். சிங்களக் கலைஞர்கள் கட்சி பேதமின்றி ஒன்றாய்ச் சேர்ந்து வீடு வீடாகச் சென்று நிதி சேகரிக்கின்றார்கள்.

ஆண்டாண்டு காலமாக பல்வகை ஆக்கிரமிப்பு அரசுகளின் கோரப் பிடியில் சிக்கி சொந்த முகங்களை இழந்து தவிக்கும் எமது தமிழீழ மக்களே!

எமது மண்ணை மீட்டெடுக்கும் இந்தப் புனிதப் போரில் எங்களது பங்கு என்ன என்பதைத் தீர்மானித்துக் கொள்வோம்.

வரலாறு எம்மீது சுமத்தும் இந்தச் சுமையை நாம் ஒவ்வொருவரும் பங்கிட்டுக் கொள்வோம்.

**நீண்ட பயணத்தை தாண்டிக் கடப்போம் . எதிர்படும் தடைகளை மோதி உடைப்போம் .**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.**

www.tamilarangam.net

# வடகிழக்கு நிலைமை

1990 . 07 . 13.

கடந்த யூன் மாதம் 10ம் திகதி தொடக்கம் இலங்கை வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களிற்கு எதிராக வான் தரை கடல் ஆகிய மார்க்கங்களினால் கடுமையான தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அரச படைகளினால் மேற்கொள்ளப்படும் இத்தாக்குதல்கள் வடக்கு கிழக்கில் வாழும் மக்களின் அமைதியான வாழ்க்கையை சின்னாபின்னமடையச் செய்கின்றன. குண்டு வீச்சு விமானங்களிலிருந்து குண்டுகளும் நேபாம் எரி குண்டுகளும் போடப்படுகின்றன. மேலும் கெலிகொப்டர்களிலிருந்து துப்பாக்கிப்பிரயோகங்களும் றொக்கட் மோட்டார் தாக்குதல்களும் நடைபெறுகின்றன. இராணுவ முகாம்களிலிருந்தும் கடலிலுள்ள கப்பல்களிலுமிருந்தும் பீரங்கித் தாக்குதல்கள் நிகழ்ந்தவண்ணமுள்ளன. இதைத் தவிர ஆகாயத்தில் இருந்து வாகனங்களைக் கண்காணித்தல் என்னும் நடைமுறை ஒன்றையும் அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனால் வாகனங்களில் பயணம் செய்யும் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட வாய்ப்புண்டு. இதனை உறுதிப்படுத்தும் வகையில் 1990 . 7 . 9 அன்று வவுனியாவில் ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது. கடந்த ஒரு மாத காலத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இராணுவ நடவடிக்கையால் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். அகதிகளாக வசிப்பிடங்களையும் உடமைகளையும் இழந்து யாழ்ப்பாணம் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு மூன்று இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் திருகோணமலை அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். குறிப்பாகக் கிழக்கு மாகாணத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மக்கள் தங்கள் குடும்ப உறவினர்களை இழந்தும் சொத்துக்களைக் கைவிட்டும் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டும் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்த இராணுவ ஆக்கிரமிப்புகளால் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளுக்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களை கடந்த ஒரு மாத காலமாக இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளனர். அத்துடன் எரிபொருள் மருந்துவகைகள் குழந்தைகளுக்கான பால் மா வகைகள் என்பனவற்றிற்கு மிக மோசமான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வட கிழக்குப் பகுதிகளிலிருந்து வெளி இடங்களுக்கான தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவத் தாக்குதலால் வட கிழக்கு வைத்திய நிலையங்கள் இயங்க முடியாது உள்ளன. குடாநாட்டில் இயங்கி வந்த ஓரிரு அரச வைத்தியசாலைகளுள் யாழ் போதனா வைத்தியசாலை எட்டு இலட்சம் மக்களுக்குத் தனது சேவையை வழங்கி வந்தது. அது இப்பொழுது முற்று முழுதாக மூடப்பட்டு தற்காலிகமாக அறுவைச் சிகிச்சைப் பகுதி மட்டும் 40 படுக்கைகளுடன் மானிப்பாயில் இயங்கி வருகிறது.

தொடர்ந்து நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளால் பாடசாலைகள் அரசாங்கத் திணைக்களங்கள் வர்த்தக நிலையங்கள் பொது நிறுவனங்கள் இயங்காமல் இருப்பதுடன் குறிப்பிட்ட பாடசாலைகள் வர்த்தக ஸதாபனங்கள் ஆகியவையும் குண்டு வீச்சுக்கு இலக்காகியுள்ளன.

அரச ஆதரவில் இயங்கி வரும் செய்தி ஸதாபனங்கள் வடக்கு கிழக்கு நிலைமை பற்றி உண்மைக்குப் புறம்பான செய்திகளை நாள்தோறும் வெளியிட்டுவருகின்றன. இப்பொழுது நடைபெற்று வருவது மக்களுக்கு எதிரான போர் அல்ல என்று எவ்வளவுதான் காரணங்கள் காட்ட முயன்றாலும் வடக்கு கிழக்கில் நடைபெறும் மேற்பட்ட சம்பவங்கள் தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளுக்குக் குரல் கொடுக்க முடியாத வகையில் முழு தமிழ் சமுதாயத்திற்கும் எதிராகச் செய்யப்படும் இனஅழிப்புத்தான் என்பதைக் காட்டுகின்றது.

இவ்வாறு எண்ணற்ற இன்னல்களுக்கும் சொல்லொணாத் துன்பங்களுக்கும் உட்பட்டு இருக்கும் நாம் இதற்குக் காரணமாக உள்ள அரச நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பதுடன் இன்றைய ஜதார்த்த நிலையை சர்வ தேச சமுகத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மாணவர்கள் ஊழியர்கள் நிர்வாக ஊழியர்கள் ஒருங்கிணைப்புக் குழு.
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்